தினமணி

## தலையங்கம்: அன்பு எது? அறிவு எது?

First Published : 16 Dec 2011 01:10:26 AM IST

பள்ளி, கல்லூரிகளில் விலங்கியல் மற்றும் உயிரியல் பாடப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் படிப்பு தொடர்பாக பூச்சிகள் மற்றும் பிராணிகளை அறுத்துக் காட்டும் நிகழ்வுகளைப் படிப்படியாகக் குறைத்துக்கொள்வதற்கான வழிகாட்டு நெறிமுறையை வெளியிட்டுள்ளது பல்கலைக் கழக மானியக் குழு.

பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) வெளியிட்டுள்ள முக்கியமான ஐந்து பரிந்துரைகள் இவைதான்: 1. மேனிலைப் பள்ளி மாணவர்கள் தங்கள் செய்முறைப் பாடத் தேர்வுக்காக ஊர்வன, பறப்பன, பூச்சிகளை அறுத்தல் கூடாது. 2. இவற்றைக் கண்காணிக்க மேனிலைப் பள்ளி அளவில் ஒரு கமிட்டி அமைக்கப்பட வேண்டும். 3. கல்லூரிகளில் இளநிலைப் பாடத்திட்டத்தில் செய்முறைத் தேர்வு, மற்றும் செயல்விளக்கம் ஆகியவற்றுக்காக அறுக்கப்படும் பூச்சிகளின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைத்துக்கொள்ள வேண்டும். 4. செயல்விளக்கத்துக்காக ஒரேயொரு பூச்சி அல்லது பிராணி மட்டுமே ஆசிரியரால் அறுக்கப்பட வேண்டும். இதை இளநிலைப் படிப்பு மாணவர்கள் செய்யக்கூடாது. 5. முதுநிலைப் படிப்பில் உள்ள மாணவர்கள் வேண்டுமானால், பாடம் தொடர்பான தெரிவு செய்யப்பட்ட சில பூச்சி அல்லது பிராணிகளை மட்டும் அறுக்கலாம்.

யுஜிசி அனுப்பியுள்ள இந்த வழிகாட்டு நெறிமுறையைப் பார்த்தவுடன் உயிரியல் துறை, விலங்கியல் துறை பேராசிரியர்கள் கொதித்துப்போனார்கள் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஆசிரியர்களுடன் கலந்துபேசாமல் தன்னிச்சையாக யுஜிசி எடுத்துள்ள இந்த முடிவு, இந்தப் பாடப் பிரிவுகளில் பயிலும் மாணவர்களின் திறனைக் குறைத்துவிடும் என்பதுதான் அவர்களது வாதம்.

யுஜிசி சொல்லும் வாதம் உயிர்க்கொலை கூடாது என்கின்ற அன்பு நெறியைச் சார்ந்தது. அதாவது, இந்தியாவில் உள்ள அனைத்து மேனிலைப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் விலங்கியல் மற்றும் உயிரியல் மற்றும் இது தொடர்பான ஆய்வுப் படிப்புகளில் 25 லட்சம் மாணவர்கள் படிக்கின்றனர். இத்தகைய கட்டுப்பாட்டை அமல்படுத்திவிட்டால், பல்வகைப்பட்ட 2 கோடி உயிரினங்களை இந்த மாணவர்களிடமிருந்து காப்பாற்றிவிடலாம். மேலும், இந்த பிராணிகளைத் தனியாரிடமிருந்து வாங்குவதற்காக கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் நிறையப் பணம் செலவிடுகின்றன.

அப்படியானால், மாணவர்கள் ஒரு பூச்சி அல்லது பிராணியின் உள்ளுறுப்புகள் செயல்படும் விதத்தை எப்படி அறிவார்கள்? இதற்காக இன்றைய நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துங்கள் என்று சொல்கிறது யுஜிசி. அதாவது கணினி உதவியுடன் மெய்நிகர் ( வெர்சுவல் ரியாலிட்டி) உத்திகள் மற்றும் அனிமேஷன் உத்திகளைக் கையாளலாம் என்றும் யுஜிசி பரிந்துரைக்கிறது.

பல்கலைக்கழக மானியக் குழுவின் இந்த அறிவிப்புக்கு புளூ கிராஸ் போன்ற பிராணிகள் வதைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஆர்வலர்கள் பாராட்டை அள்ளி வழங்கியுள்ளார்கள். நடைமுறையில் இது சாத்தியமா?

நடைமுறையில் குறைந்த விலைக்கு கிடைக்காத பிராணிகள், அரிய உயிரினம் என்று அறிவிக்கப்பட்ட உயிரினங்களை அறுத்தலுக்குத் தடை விதித்தால் அதைப் புரிந்துகொள்ள முடியும். அல்லது பன்றி, முயல், நாய் போன்ற பிராணிகளை அறுக்கும்போது அவற்றுக்கு மயக்க மருந்து கொடுத்து, அவை வலியால் துடிக்காமல் அறுத்தல் வேண்டும் என்று பரிந்துரைத்தாலும் புரிந்துகொள்ள முடியும். மேனிலைப் பள்ளிகளில் மட்டும் இத்தகைய அறுவைச் செய்முறைத் தேர்வுகள் வேண்டாம் என்று சொன்னாலும் கல்வி உலகம் ஏற்றுக்கொள்ளும். ஆனால், இளநிலை மற்றும் முதுநிலை படிப்புகளுக்கே இத்தகைய தடை என்றால், அந்த மாணவர்கள் எவ்வாறு ஆய்வுகளில் ஆர்வம் கொள்ளவும் தெளிவான தேர்ச்சி பெறவும் முடியும்?

மருத்துவம் பயிலும் மாணவர்கள் இறந்தவர்களின் உடலைப் பரிசோதனை செய்து உடல்உறுப்புகளை அறிந்து கொண்ட பின்னர், முதுநிலைப் படிப்பில்தான் அவர்கள் அறுவைச் சிகிச்சைக்குத் தயாராகிறார்கள். நோயாளிகளின் உடலில் கத்தியை வைக்கும் உரிமை அப்போதுதான் அவர்களுக்குக் கிடைக்கிறது. இப்போது சடலங்கள் கிடைப்பதிலும் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்பதால், மனிதபொம்மைகளைக் கணினி உதவியுடன் செயல்படுவதைப்போல இயக்கி, ஒவ்வொரு மாறுதலையும் அந்த மனிதபொம்மையில் நிகழ்த்திக் காட்டுகிறார்கள். அறுவைச் சிகிச்சைகளின் போது உடனிருந்து காண மட்டும் செய்கிறார்கள்.

ஆனாலும், இந்தப் படிப்பை முடித்துவிட்டு, முதுகலை மருத்துவப் படிப்பில் ஒரு மாணவர் தானே அறுவைச் சிகிச்சை செய்யும்போது கிடைக்கும் அனுபவமும் அதில் அவரது சரியான அணுகுமுறை மற்றும் புரிதலும்தான் அந்த மாணவரை சிறந்த அறுவைச் சிகிச்சை நிபுணராக மாற்றுகிறது. ஏனென்றால், உயிருள்ள மனித உடல் இயங்குவதை உள்ளே எட்டிப் பார்க்கும்போதுதான் அவரால் ஒவ்வொரு உடலும் ஒன்றுதான் என்றாலும், ஒவ்வொன்றும் தனித்துவமானது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

பிரிட்டிஷ் எழுத்தாளர் சாமர்செட் மாம் ஒரு மருத்துவர். ஒரு அறுவைச் சிகிச்சையின்போது, ஒரு நோயாளியின் கல்லீரலைப் பார்த்து, நாம் பாடத்தில் படித்த அளவும் இங்கே காண்பதும் வேறாக இருக்கிறது என்று சொல்ல, அந்தப் பேராசிரியர் அதற்குப் பதிலாக "இயல்பானதுதான் அரிதிலும் அரிதானது' என்று கூறியதாக அவர் எழுதுகிறார்.

பள்ளி, கல்லூரிகளில் யாரும் அரிய உயிரினங்களை அறுத்து செய்முறைத் தேர்வு செய்வது கிடையாது. முதலில் மலர்கள், பின்னர் பட்டாம்பூச்சி, தும்பி, பல்லி, கரப்பான்பூச்சி, எலி, முயல், பன்றி ஆகியனதான் பள்ளி, கல்லூரி அளவில் செய்முறை மற்றும் செயல்விளக்கத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இதற்குத் தடை விதிப்பதன் மூலம் அந்த விலங்குகளைக் காப்பாற்றிவிட முடியும் என்றால் ஒவ்வொரு நாளும், எத்தனை ஆடுகள், மாடுகள், கோழிகள் வெட்டப்படுகின்றன. ஒவ்வொரு தெருவிலும் ஒரு இறைச்சிக் கடை இருக்கிறதே! அங்கே நடப்பதைக் காட்டிலுமா, பள்ளி, கல்லூரிகளில் உயிர்வதை நடந்துவிடுகிறது?

மாத்திரை மருந்துகளின் விளைவுகளை தற்போது விலங்குகளிடம்தான் சோதிக்கிறோம். அதையும் நிறுத்திவிடலாமா? உணவுக்காக ஓர் உயிரைக் கொல்லுதல் அறிவீனம். அறிவுக்காக ஒரு சில பிராணிகளைக் கொல்ல நேர்ந்தால் அது பொதுநலம். யுஜிசி தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான் நமது வேண்டுகோள்.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 16 Dec 2011 02:44:36 AM IST

Last Updated : 16 Dec 2011 03:57:07 AM IST



சென்னை, டிச. 15: தமிழகத்தில் சில இடங்களில் அடுத்த 24 மணிநேரத்துக்கு மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் தெரிவித்தார். இது குறித்து அவர் வியாழக்கிழமை கூறியது:

மழை பெய்வதற்கு சாதகமான சூழ்நிலை வளி மண்டலத்தின் மேலடுக்கில் நிலவுவதால், கடந்த 24 மணிநேரத்தில் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் உள்பட பல இடங்களில் நல்ல மழை பெய்துள்ளது. அடுத்த 24 மணிநேரத்துக்கு தமிழகம் மற்றும் புதுவையில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தமிழக கடலோர மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் புதன்கிழமை இரவு முதல் விடிய, விடிய பலத்த மழை பெய்தது. வியாழக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி சென்னை அண்ணா பல்கலைக்கழகம் பகுதிகளில் 80 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

## தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டும் தீர்மானத்துக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு

First Published : 16 Dec 2011 03:11:15 AM IST

Last Updated : 16 Dec 2011 04:08:34 AM IST

சென்னை, டிச. 15: முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தவும், அணையில் தமிழகத்துக்கு உள்ள உரிமையை நிலைநாட்டவும் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த குரலில் ஆதரவு தெரிவித்தன.

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக அனைத்துக் கட்சிகள் அடங்கிய குழுவுடன் பிரதமரை நேரில் சந்திக்க வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதாவுக்கு கட்சிகளின் சார்பில் கோரிக்கையும் விடுக்கப்பட்டது. முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை 142 அடிக்கு உயர்த்தக் கோரியும், அணையில் உள்ள உரிமையை எந்தச் சூழ்நிலையிலும் தமிழகம் விட்டுக் கொடுக்காது என்றும் பேரவையில் வியாழக்கிழமை தீர்மானம் முன்மொழியப்பட்டது.

அந்தத் தீர்மானத்தை ஆதரித்து கே.பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்) பேசியது:

முதல்வர் ஜெயலலிதா இந்தப் பிரச்னையை நிதானமான முறையில் அணுகுவதற்காக அவரைப் பாராட்டுகிறோம். இரு மாநிலங்களுக்கு இடையே நதி நீர்ப் பகிர்வு பிரச்னை ஏற்படும்போதெல்லாம் மத்திய அரசு தலையிட்டு, பயனளிக்கத் தக்க வகையில் எதையும் செய்யவில்லை. மத்திய அரசு இந்தப் பிரச்னையில் அக்கறையின்றி இருக்கிறது. ஒரு நியாயமான முறையில் மத்திய அரசு இந்தப் பிரச்னையில் தலையிட வேண்டும்.

தேனி மாவட்டத்திலும், கேரளத்திலும் பதற்றமான சூழல் நிலவுகிறது. இரு மாநில மக்களிடையே மோதலை உருவாக்கி ஆதாயம் தேடும் முயற்சிக்கு யாரும் இடம்கொடுத்துவிடக் கூடாது என்றார் கே. பாலகிருஷ்ணன்.

குணசேகரன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி): எங்களது கட்சியின் சார்பில் இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறோம். இந்தப் பிரச்னையை இரு மாநிலங்களுக்கு இடையேயான பிரச்னையாகப் பார்க்காமல், தேசப் பிரச்னையாகப் பார்க்க வேண்டும். தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படையை அனுப்பி அணையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உணவு உற்பத்தியைப் பாதுகாக்கும் வகையில் முல்லைப் பெரியாறு அணையில் 152 அடி வரை நீரைத் தேக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ரங்கராஜன் (காங்கிரஸ்): தமிழக - கேரள எல்லையில் நிலவும் பதற்றமான சூழலை மத்திய அரசு கவனத்தில் கொண்டுள்ளது. அணைக்கு மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பு வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் தலைமையிலான எம்.பி.க்கள் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

ஜே. குரு (பா.ம.க.): இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறோம். முல்லைப் பெரியாறு அணை அமைந்துள்ள தேவி குளம், பீர்மேடு பகுதிகள் தமிழகத்திடம் இருந்து பிரிக்கப்பட்டு கேரளத்துடன்

இணைக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளை மீண்டும் தமிழகத்துடன் சேர்க்கக் கோரி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

எம்.எச். ஜவாஹிருல்லாஹ் (மனித நேய மக்கள் கட்சி): முல்லைப் பெரியாறு அணைக்குப் பதிலாகக் கட்டப்படும் புதிய அணை மூலம் தண்ணீர் கிடைக்கும் என்பது ஏமாற்றுவேலை. தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்னையில் அக்கறையில்லாமல் உள்ளதுபோல, முல்லைப் பெரியாறு விஷயத்திலும் மத்திய அரசு அக்கறையில்லாமல் உள்ளது.

டாக்டர் கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்): இந்தத் தீர்மானத்தை மனதார வரவேற்கிறோம். இந்தப் பிரச்னையில் மத்திய அரசு மௌனம் காப்பது ஏன் என்று தெரியவில்லை. தமிழகத்தின் ஒற்றுமையை உணர்த்தும் வகையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கொண்ட குழுவுடன் பிரதமரை முதல்வர் சந்திக்க வேண்டும். அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்துக்கும் அழைப்பு விடுக்கலாம்.

ஆர்.சரத்குமார் (அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி): நிலநடுக்கத்தின் காரணமாக உலகில் உள்ள எந்த அணையும் இதுவரை உடையவில்லை. இந்தப் பிரச்னையில் மத்திய அரசு மெத்தனப்போக்கோடு நடந்து கொள்கிறது. முல்லைப் பெரியாறு அணை மிகவும் பலமாக உள்ளது. புதிய அணை தேவையில்லை.

கதிரவன் (பார்வர்டு பிளாக்): கேரளத்தில் நடைபெற உள்ள இடைத்தேர்தலுக்காக மக்களை திசைத் திருப்பவே இந்தப் பிரச்னையை அந்த மாநில கட்சியினர் எழுப்புகின்றனர். வன்முறையைத் தூண்டும் அளவுக்கு கேரள அமைச்சர்களின் பேச்சு உள்ளது.

தனியரசு (கொங்கு இளைஞர் பேரவை): முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் உச்ச நீதிமன்ற தீர்ப்பை மதிக்காததன் மூலம் கேரள அரசு சட்டவிரோதமாக நடந்துகொள்கிறது.

செ.கு.தமிழரசன் (இந்திய குடியரசுக் கட்சி): நதிகளைத் தேசியமயமாக்க வேண்டும். அப்போதுதான் இதற்கு நிரந்தரத் தீர்வை நாம் காண முடியும். இந்த விஷயத்தில் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்கிறதோ என்ற எண்ணம் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

**கரும்புக்கு கூடுதல் விலை நிர்ணயிக்கப்படுமா?**

- கு. வைத்திலிங்கம் -

First Published : 15 Dec 2011 02:13:20 PM IST

அரியலூர், டிச. 14: கரும்பு சாகுபடியில் உற்பத்திச் செலவு அதிகரித்து வரும் நிலையில், அதற்கான கொள்முதல் விலையைக் கூடுதலாக நிர்ணயிக்க தமிழக அரசு முன்வர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில் நெல் பயிருக்கு அடுத்ததாக விவசாயிகள் அதிகம் சாகுபடி செய்வது கரும்புதான். விவசாய நிலங்கள் எல்லாம் தற்போது மனைகளாக மாறி வரும் நிலையில், விவசாயமும் குறைந்து

கொண்டு வருகிறது. விவசாயம் நல்ல நிலையில் இருந்த போது, நெல்லுக்கு நிகராகக் கரும்பையும் விவசாயிகள் சாகுபடி செய்து, லாபம் பெற்று வந்தனர். ஆனால், இன்றைய நிலையில், கரும்பு விவசாயிகளுக்கு போதிய லாபம் இல்லை. காரணம் செலவைக் காட்டிலும், வருவாய் குறைந்து வருவதுதான்.

ஓர் ஏக்கரில் 40 டன் கரும்பை உற்பத்தி செய்ய ரூ. 1.10 லட்சம் வரை செலவாகிறது. ஆனால், விவசாயிகளுக்கு கிடைப்பது ரூ. 80,000 வரைதான். இதனால், விவசாயிகளுக்கு ரூ. 30,000 வரை நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நிலையில், டன் கரும்புக்கு கொள்முதல் விலையாக ரூ. 1925 மட்டுமே அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது. ஏக்கரில் 40 டன்னுக்கு இந்தத் தொகையைக் கணக்கிட்டால், ரூ. 77,000 வரைதான் கிடைக்கும். சில தொழில்சாலைகள் டன்னுக்கு 1950 தந்தாலும்கூட, ரூ. 3000 வரையே விவசாயிகளுக்குக் கூடுதலாகக் கிடைக்கும்.

விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு உரிய விலை கிடைத்தால்தான், பலன் கிடைக்கும். ஆனால், தமிழகத்தில் உற்பத்திப் பொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை.

இதுகுறித்து தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலர் எம். மணி கூறியது:

விலைவாசி உயர உயர அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை மத்திய, மாநில அரசுகள் உயர்த்திக் கொண்டிருக்கும் நிலையில், விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு மட்டும் விலை நிர்ணயம் செய்வதில் பாரபட்சம் காட்டப்படுகிறது.

அரசு சர்க்கரை ஆலைகளின் நிலைமை எப்படி என்று தெரியவில்லை. ஆனால், தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பை விவசாயிகளிடமிருந்து பெற்று, நல்ல லாபம் சம்பாதிக்கின்றன. சர்க்கரை, மின்சாரம், எத்தனால், எரிசாராயம் என இவற்றின் மூலம் ஒரு டன் கரும்பிலிருந்து குறைந்தது ரூ. 15,000 வரை லாபம் சம்பாதிக்கின்றன.

ஆனால், கரும்பு விவசாயிகள் ஓராண்டு காலம் உழைத்தாலும் நஷ்டம்தான் மிஞ்சுகிறது. அரியலூர் மாவட்டத்தில் நிகழாண்டில் 12,000 ஏக்கர் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த விவசாயிகளுக்கு வரவைக் காட்டிலும், செலவுதான் அதிகம். எனவே, கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, டன்னுக்கு ரூ. 3000 விலை நிர்ணயம் செய்து தமிழக அரசு அறிவிப்பை வெளியிடவேண்டும் என்றார் அவர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**இயந்திரமயமாக்கலால் ஆள் பற்றாக்குறையை சமாளிக்கலாம் :வேளாண் பொறியியல் அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2011,01:20 IST

அன்னூர் : கரும்பு தோட்டங்களில் இயந்திரங்களை பயன்படுத்தினால், செலவை 50 சதவீதம் குறைக்கலாம் என, வேளாண் பொறியியல் துறை அதிகாரி, அன்னூரில் தெரிவித்தார்.
கோவை, வேளாண் பொறியியல் துறை சார்பில், அன்னூர் அருகே அழகப்ப கவுண்டன்புதூரில் கரும்பு விவசாயிகளுக்கு ஒரு வார பயிற்சி நடந்தது. பயிற்சி மற்றும் செயல் விளக்கத்தில் கரும்பு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ராக்கியப்பன், வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் பாலசுப்ரமணியம், வேளாண் பல்கலை பேராசிரியர்கள், பல்வேறு தொழில்நுட்பங்களை விளக்கினார்.
வேளாண் பொறியியல்துறை இளநிலை பொறியாளர் சக்திவேல் பேசியதாவது:
கரும்பு நடவு இயந்திரத்தில் கரணைக்கரும்புகளை வைத்து விட்டால், இயந்திரமே கரணையை வெட்டுதல், குழியில் நடுதல், அடியுரம் இடுதல், பூஞ்சாணக்கொல்லி மருந்து தெளித்தல், மண் அணைத்தல் ஆகிய பணிகளை செய்து விடுகிறது. இப்பணிக்கு வழக்கமாக ஒரு ஏக்கருக்கு 10 பேர் இரண்டு நாள் வேலை செய்ய வேண்டும். நடவு இயந்திரத்திற்கு ஒரு ஏக்கருக்கு 1,500 ரூபாய் மட்டுமே கூலி. இரண்டு ஆள் இருந்தால் போதுமானது. ஒரே நாளில் நான்கு ஏக்கர் வரை நடவு பணியை எளிதில் முடிக்கலாம்.
வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில், நிலம் தயார் செய்யும் கருவிகள், கரும்பு நடவு கருவிகள், களை எடுக்கும் இயந்திரம், அறுவடை கருவிகள் மானியத்தில் வழங்கப்படுகின்றன. மண் தள்ளும் இயந்திரம், அள்ளும் இயந்திரம் டிராக்டர் என விவசாய பணிக்கு தேவைப்படும் இயந்திரங்கள் குறைந்த வாடகையில் கிடைக்கின்றன. விபரங்களுக்கு கோவை, தடாகம் ரோட்டிலுள்ள வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தை நேரிலோ அல்லது 0422-243 3711 என்கிற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.
இவ்வாறு, அவர் பேசினார்.
பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலை அதிகாரிகள் கூறுகையில்,
""தேசிய அளவில் ஒரு ஏக்கருக்கு சராசரியாக 30 டன் கரும்பு கிடைக்கிறது. தமிழகத்தில் சராசரியாக 40 டன் விளைச்சல் உள்ளது. இதை 60 டன்னாக உயர்த்த வேண்டும் என்பது எங்கள் இலக்கு. அதற்காக கரும்பு விவசாயிகளுக்கு இயந்திரமயமாக்கல் பணிகளுக்கு அரசின் மானியத்துடன் ஆலை சார்பிலும் மானியம் வழங்கப்படுகிறது," என்றனர்.

**விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் திட்டக்குழு உறுப்பினர் செயலர் தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2011,01:32 IST

கருத்தை பதிவு செய்ய

திருச்சி: ""விவசாயத்துக்கு 12வது ஐந்தாண்டு திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படும்,'' என மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் தனவேல் கூறினார். வரும் 2012-2017ம் ஆண்டுக்கான 12வது ஐந்தாண்டு திட்டம் தயாரிக்க மாநில திட்டக்குழுவின் மண்டல அளவிலான ஆலோசனைக் கூட்டம் திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று காலை நடந்தது.

மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் தனவேல் நிருபர்களிடம் கூறியதாவது: பனிரென்டாவது ஐந்தாண்டு திட்ட அறிக்கை தயாரிக்க 12 வழிகாட்டும் குழு, 47 பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலத்திலும் கல்வியாளர், மருத்துவர், சேவை சங்கம் ஆகியோரை சந்தித்து ஆலோசனை கேட்டு, தயாரிக்கப்பட உள்ளது. இந்த திட்டத்தில் விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். விவசாயத்துறையின் வளர்ச்சியை 4 சதவீதமாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. தனி நபர் வருமானத்தை இரண்டிலிருந்து மூன்று மடங்காகவும், உணவு உற்பத்தியை 2 மடங்காகவும் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

"குளிர்பதன கிடங்குகள் அமைக்க வேண்டும். வாழை சாகுபடி கருத்தில் கொண்டு விவசாயம் சார்ந்த தொழில்களை அமைக்க வேண்டும். உற்பத்தியை விவசாய அமைப்புகள் மூலம் சந்தைப்படுத்த வேண்டும். தரமான விதை நெல் வழங்க வேண்டும்' என விவசாயிகள கோரிக்கை வைத்துள்ளனர். நூறு நாள் வேலை வழங்கும் திட்டம் முறைப்படுத்தி விவசாய பணிகளுக்கு மேற்கொள்ளப்படும். கோவை, ஈரோடு ஆகிய மாவட்டங்கள் தொழில் துறையில் வளர்ச்சியடைந்தது போல, டெல்டா மாவட்டங்களும் தொழில் துறையில் வளர்ச்சியடைய சிறப்புதொழில் வளாகங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாநில அளவிலும், தொழில் வளர்ச்சி வழிகாட்டி அமைப்பு அமைக்கப்பட உள்ளது. விவாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை வேளாண் பல்கலை, விவசாய பயிற்சி மையங்கள் ஆகியன மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப கல்லூரிகளில் படித்து முடிக்கும் மாணவர்களில் 20 சதவீதம் பேரும், கலை கல்லூரியில் 15 சதவீதம் மட்டுமே வேலைவாய்ப்பு பெற முழு தகுதியும் பெற்றுள்ளனர். எனவே, மாணவர்களின் திறன் வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்டங்களுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வை நீக்க திட்டமிட்டுள்ளோம். தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோவை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மனித மேம்பாட்டு குறியீடு உயர்ந்த அளவில் உள்ளது.

தர்மபுரி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், திருவண்ணாமலை, பெரம்பலூர் மாவட்டங்களில் குறைவாக உள்ளது. இதை சமன்படுத்தும் திட்டம் குறித்தும் யோசிக்கிறோம். வரைவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு வரும் ஃபிப்ரவரி மாதம் தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடைபெற உள்ள மாநில திட்டக்குழு கூட்டத்தில் தாக்கல் செய்யப்படும். கூட்டத்தில், ஒப்புதல் பெறப்பட்டு, அடுத்தாண்டு ஏப்ரல் 1ம் தேதி முதல் 12வது ஐந்தாண்டு திட்டம் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படும். இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது, திருச்சி கலெக்டர் ஜெயஸ்ரீ, திட்டக்குழு துணைத்தலைவர் கிறிஸ்டோஃபர் நெல்சன், உறுப்பினர்கள் பாலகுருசாமி, முத்தையா, ராமசாமி ஆகியோர் உள்பட பலர் உடனிருந்தனர்.

**சொட்டுநீர் பாசனம் அமைக்க 100% மான்யம் விவசாயிகளுக்கு கரூர் கலெக்டர் அழைப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2011,01:35 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர்: "தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சிக்கு வித்திடும் வகையில் சொட்டு நீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு 100 சதவீத மான்யம் வழங்கப்படுகிறது' என்று கரூர் கலெக்டர் ÷ஷாபனா அறிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நீர் பயன்பாட்டினை நிர்வகிக்கவும், நுண்ணீர் பாசன முறைகளை விவசாயிகளிடையே விரிவாக்கம் செய்யவும், பாசன அளவில் உற்பத்தித் திறனை அதிகரிக்க சொட்டுநீர் பாசனத்தை சிறு, குறு விவசாயிகள் பயன்படுத்தும் வகைளில், மானியத்தை அதிகரிக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார் அதன்படி, கரூர் மாவட்டத்தில் நுண்ணீர் பாசனம் அமைத்து பயிரிடும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியமும் வழங்க உத்தரவு பெறப்பட்டுள்ளது.

அந்த திட்டத்தின் படி கரூர் மாவட்டத்தில் சிறு, குறு விவசாயிகள் 900 ஏக்கர் நிலப்பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைக்க 100 சதவீத மானியமும், 225 ஏக்கர் நிலப்பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைக்க 75 சதவீத மானியமும் வழங்கப்படும்.

தோப்புகளில் நடப்படும் பழமரங்கள், தென்னை, முருங்கை போன்ற மரவகை பயிர்கள் வரிசைகளில் நடப்படும் காய்கறிப்பயிர்கள் மற்றும் மரவள்ளி, மஞ்சள், வாழை, கரும்பு, பருத்தி போன்ற பயிர்களும் சொட்டு நீர் பாசனம் மூலம் பாசனம் செய்ய ஏற்ற பயிராகும். தற்போது தமிழக முதல்வர் அறிவித்துள்ளபடி சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க 100

சதவீதம் மானியமாக ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக மானியத் தொகை 43 ஆயிரத்து 816 ரூபாய் வழங்கப்படுகிறது.

பயிர் சாகுபடிக்கான போதுமான நீர் வசதி இருக்க வேண்டும். பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் மாற்றுத்திறனாளி விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விவசாயிகள் ஒருங்கிணைந்து நுண்ணீர் பாசனம் அமைத்து மானியத்தை பெறலாம். குத்தகைக்கு சாகுபடி செய்யும் விவசாயிகள் 10 ஆண்டுகளுக்கான குத்தகை ஒப்பந்த பத்திர நகலை அளித்து பயன்பெறலாம். சிறு, சிறு விவசாயிகளுக்கான சான்று, நிலத்தின் வரைப்படம், சிட்டா, அடங்கல் ஆகியவைகளை வருவாய் துறையினரிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் கொடுக்க வேண்டும். மேலும், குடும்ப அட்டை ஜெராக்ஸ், சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போட் சைஸ் மூன்று ஃபோட்டோ போன்ற ஆவணங்கள் சொட்டு நீர் பாசனம் அமைக்க விவசாயிகள் துறை அலுவலர்களிடம் வழங்க வேண்டும்.

இந்த திட்டத்தின் கீழ் பயனடைய விரும்பு விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குனர்கள், வேளாண் உதவி இயக்குனர்கள், வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்கள் மற்றும் கரும்பு அலுவலர்களை தொடர்பு கொண்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் சொட்டு நீர் பாசனம் அமைத்து பயன்பெறலாம்.மேலும், விபரங்களை தெரிந்து கொள்ள கரூர் தாந்தோணிமலையிலுள்ள தோட்டக்கலை துணை இயக்குனர் அலுவலகத்தை 04324-255289 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**சர்க்கரை ஆலை கரும்பு அரவை துவக்க விழா பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2011,01:50 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் 2011-12ம் ஆண்டுக்கான கரும்பு அரவையை கலெக்டர் தரேஷ்அஹமது துவக்கி வைத்து பேசியதாவது: பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் 2011-12ம் ஆண்டுக்கான கரும்பு அரவை இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இது பெரம்பலூர் கரும்பு விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய நிகழ்ச்சியாகும். விவசாயிகள் கரும்பு பயிரிடுவதற்காக ஆலை நிர்வாகத்தின் மூலம் விவசாயிகளுக்கு வங்கிக்கடன் வழங்க பரிந்துரை செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. 2011-12ம் ஆண்டு அரவை பருவத்திற்காக 6,150 விவசாயிகள்

தங்களின் 13 ஆயிரத்து, 671 ஏக்கர் கரும்பினை தமிழக அரசின் பெரம்பலூர் சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்துள்ளனர்.

இதன் மூலமாக சர்க்கரை ஆலைக்கு 4 லட்சத்து, 30 ஆயிரம் டன் கரும்பு அரவைக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது துவக்கப்பட்டுள்ள ஆலையின் அரவையானது 172 நாட்கள் தொடாந்து நடைபெறும். இதன் மூலம் நாளொன்றுக்கு 3,000 டன் கரும்பு அரவை செய்யப்பட உள்ளது. சர்க்கரை உற்பத்தி 4 லட்சத்து, 10 ஆயிரம் குவின்டால் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆலையில் 96 கோடி ரூபாயில் இணை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இதில், 70 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. 2012-13 ஆண்டுக்கான அரவை பருவத்தில் மின் உற்பத்தி துவங்கும் வகையில் பணிகள் நடந்து வருகின்றன.

இந்த இணை மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் 18 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படும். சர்க்கரை ஆலையின் இணை மின் நிலைய பணிகளுக்காக மொத்த செலவில் தமிழக அரசு 90 சதவீத நிதியை அளித்துள்ளது. சர்க்கரை ஆலை விவசாயிகளின் பங்குத்தொகை 10 சதவீதம் ஆகும். ஆலையை 40 கோடி ரூபாய் மதிப்பில் நவீனமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு (2011-12) அரவை பருவத்திற்காக 1.45 கோடி ரூபாய் மதிப்பில் சர்க்கரை ஆலையில் இயந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற்றுள்ளன.
இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக கலெக்டர் 2011-12ம் ஆண்டு அரவை பருவத்திற்கான முதல் கரும்பு ஏற்றிய வாகனத்தின் எடையின் அளவை கம்ப்யூட்டர் மூலம் கணக்கிட்டு பதிவு செய்தார். இதில், எம்.எல்.ஏ., தமிழ்ச்செல்வன், சர்க்கரை ஆலையின் தலைமை நிர்வாகி ஜெயந்தி, விவசாய சங்க பிரதிநிதிகள், கரும்பு விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி 23 சதவீதம் உயர்வு**

டிசம்பர் 15,2011,02:44



கொச்சி:நடப்பு 2011-12ம் நிதியாண்டின், சென்ற செப்டம்பருடன் முடிவடைந்த அரையாண்டில், நாட்டின் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, 23 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. இறால்கள்ஏற்றுமதி அதிகரித்ததையடுத்து, நாட்டின் ஒட்டு மொத்த கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி உயர்ந்துள்ளது.பற்றாக்குறைமதிப்பீட்டு காலத்தில், சர்வதேச சந்தையில், இறால்களுக்கு கடும் பற்றாக்குறை காணப்பட்டது. இந்த அருமையான சந்தர்ப்பத்தை, இந்திய ஏற்றுமதியாளர்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டு, இறால்களை அதிகளவில் ஏற்றுமதி செய்தனர்.

சென்ற செப்டம்பர் வரையிலான ஆறு மாத காலத்தில், கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, கடந்த ஆண்டு, இதே காலத்தை விட, அளவின் அடிப்படையில் 0.12 சதவீத வளர்ச்சி கண்டு, 3 லட்சத்து 12 ஆயிரத்து 530 டன்னில் இருந்து,3 லட்சத்து 12 ஆயிரத்து 904 டன்னாகஅதிகரித்துள்ளது.இதே காலத்தில், ரூபாய் மதிப்பின் அடிப்படையிலான ஏற்றுமதி வருவாய், 19.91 சதவீதம் அதிகரித்து, 5,571 கோடியில் இருந்து, 6.679 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. அது போன்று, டாலர் அடிப்படையிலான ஏற்றுமதி வருவாய், 23 சதவீதம் அதிகரித்து, 150 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

**ரூபாய் மதிப்பு:**அமெரிக்க டாலர் மதிப்பு உயர்ந்து, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி கண்டுள்ள தால், ஏற்றுமதியாளர்களின் லாப வரம்பு அதிகரித்துள்ளது. இதே காலத்தில், கடல் உணவுப் பொருட்களின் மதிப்பு, 22.7 சதவீதம் அதிகரித்து. சராசரியாக ஒரு கிலோ, 3.89 டாலர் என்ற அளவில் இருந்து, 4.78 டாலராக உயர்ந்துள்ளது.சென்ற 2010-11ம் நிதி யாண்டில்,இந்தியா, 12 ஆயிரத்து 901 கோடி ரூபாய் (286 கோடிடாலர்) மதிப்பிலான,8 லட்சத்து 13 ஆயிரத்து 91 டன் கடல் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. இதில், பதப்படுத்தப்பட்ட இறால்களின் ஏற்றுமதி, 44 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற செப்டம்பருடன் முடிந்த அரையாண்டு காலத்தில், கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில், டாலர் அடிப்ப டை யிலான மொத்த வருவாயில், பதப்படுத்தப்பட்ட இறால்கள் வாயிலான வருவாய், 58.41 சதவீதம் என்பது குறிப் பிடத் தக்கது. இதே காலத்தில், இறால்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 19.34 சதவீதமும், ரூபாய் மதிப்பில் 32.90 சத வீதமும் உயர்ந்துள்ளது. இது, டாலர் மதிப்பில், 36.74 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துள்ளது.

**ஜப்பான்:**இந்தியா, ஜப்பானுக்கு அதிகளவில் பதப்படுத்தப்பட்ட இறால்களை ஏற்றுமதி செய்து வருகிறது. மதிப்பீட்டு காலத்தில், அந்நாட்டிற்கான, இந்தியாவின் பதப்படுத்தப்பட்ட இறால்கள் ஏற்றுமதி, குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது.இந்தியாவில் இருந்து இறக்குமதியாகும் இறால்களுக்கு,அமெரிக்கா அதிக பொருள் குவிப்பு வரி விதித் துள்ளது. இதை நீட்டிப்பது குறித்து, அமெரிக்கா பரிசீலித்து வருகிறது. இந்நிலையிலும், அமெரிக்காவிற்கு, இந்தியா அதிகளவில் பதப்படுத்தப்பட்ட இறால்களை ஏற்றுமதி செய்து வருவது குறிப்பிடத்தக்கது. அதே சமயம், வியட்னாம் மற்றும் தாய்லாந்து நாடுகளின் இறால் ஏற்றுமதி குறைந்துள்ளதால், இந்திய இறால்களுக்கான தேவை அதிகரித்துள்ளது.

இந்தியாவின் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில், ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளன. மதிப்பீட்டு காலத்தில், இந்நாடுகளுக்கான இந்தியாவின் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி வருவாய், டாலர் மதிப்பில் 23.82 சதவீதமாகவும், அளவின் அடிப்படையில், 22.62 சதவீதமாகவும் வளர்ச்சி கண்டுள்ளது.

இந்தியாவின் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில், அமெரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது. மதிப்பீட்டு காலத்தில், அமெரிக் காவிற்கான நமது நாட்டின் கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதி வருவாய், டாலர் மதிப்பில் 23.82 சதவீதம் என்ற அளவில் உள்ளது.அடுத்த இடங்களில் தென் கிழக்கு ஆசியா (20.12 சதவீதம்), ஜப்பான் (15.60), சீனா (4.98), மத்திய கிழக்கு நாடுகள் (3.95) மற்றும் இதர நாடுகள் (8.23 சதவீதம்) உள்ளன.

**மீனவருக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,22:51 IST

கருத்தை பதிவு செய்ய

ராமநாதபுரம் : விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும், படகுகளின் செயல்திறனை அதிகரிக்க செய்யவும், ஆழ்கடலில் சூரை மீன் பிடிக்க அரசால்

மானியம் வழங்கப்பட உள்ளது. பயன்பெற விரும்புவோர் ராமநாதபுரம், ராமேஸ்வரம் மீன்வள உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம்.

**பால் உற்பத்தியை பெருக்க 1000 பசுக்களுக்கு செயற்கை கருத்தரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2011,03:00 IST

கருத்தை பதிவு செய்ய

காரைக்குடி : சிவகங்கை மாவட்டத்தில் பால் உற்பத்தியை பெருக்கும் வகையில் நடப்பாண்டு 1000 கருவுறா பசுக்களுக்கு செயற்கை முறையில் கருவூட்டும் திட்டத்தை கலெக்டர் ராஜாராமன் துவக்கி வைத்தார்.தேசிய வேளாண் அறிவியல் திட்டத்தின் கீழ் கடந்தாண்டு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, 8 மாவட்டங்களில் கருவுறா பசுக்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் திட்ட முன்னோட்டம் நடந்தது. இதற்கு நல்ல வரவேற்பு இருந்ததால், சிவகங்கை மாவட்டத்தில் இத்திட்டம் துவங்கப்பட்டது. கால்நடை பராமரிப்பு துறை மூலம் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தில் முதல்கட்டமாக மாதத்திற்கு 250 பசுக்கள் வீதம், நான்கு மாதத்தில் 1000 கருவுறா பசுக்களுக்கு செயற்கை முறையில் கருவூட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2012ல் தற்போது உற்பத்தியாகும் பால் உற்பத்தியை விட, நாளொன்றுக்கு 6000 முதல் 7500 லிட்டர் வரை கூடுதலாக பால் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. விலையில்லா கறவை மாடுகள், அதிக பால் உற்பத்தி செய்யும் கூட்டுறவு சங்கங்களின் கறவை மாடுகள், புல் வளர்ப்பின் மூலம் பராமரிக்கும் கறவை மாடுகள் பராமரிக்கும் கறவை மாடுகள், மகளிர் குழுக்களால் பராமரிக்கப்படும் கறவை மாடுகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.கலெக்டர் கூறுகையில், "" மாவட்டத்தில் பால் உற்பத்தியை பெருக்கும் வகையில் கருவுறா கறவை மாடுகள் ஒருங்கிணைந்த (சின்குரோனிசேஷன்) கருவூட்டல் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. தற்போது, ஆவின் மூலம் தினமும் 28,500 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. 1000 பசுக்கள் பயனடைவதால், 2012ல் நாளொன்று 6000 லிட்டர் வரை பால் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு உள்ளது'' என்றார்.

**கரும்பு உற்பத்தியை பெருக்க சக்தி ஆலை நிர்வாகம் முயற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2011,02:59 IST

கருத்தை பதிவு செய்ய

சிவகங்கை : படமாத்தூரில் உள்ள சக்தி சர்க்கரை ஆலையில் 24வது ஆண்டு கரும்பு அரவை துவங்கியது. பூஜையில் கலெக்டர் ராஜாராமன் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் ஆலை தலைவர் நடராஜன் பேசியதாவது: நடப்பு அரவை பருவத்திற்கு 6 லட்சம் டன் கரும்பு அரவைக்கு திட்டமிடப்பட்டுள்ளது. பிற மாவட்டங்களை ஒப்பிடுகையில், சிவகங்கை மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி 8 டன் வரை குறைவாக பயிரிடப்படுகிறது. உற்பத்தி அளவை உயர்த்திட சொட்டு நீர் பாசன முறையில் பயிர் செய்வதோடு, ஏற்கனவே பயிர் செய்துள்ள சொட்டுநீர் பாசன மறுதாம்பு கரும்பில் போக்கிடங்களை நிரப்புவதற்காக கரும்பு நாற்றுக்கள் நிரப்ப திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஏக்கருக்கு 6 டன் வரை உற்பத்தி அதிகரிக்கும்.பசுமைக்குடில் திட்டத்தின் மூலம் கரும்பு நாற்றுகள் உற்பத்தி செய்வதற்கு விவசாயிகள், சுய உதவிக்குழுக்களை ஆலை நிர்வாகம் தேர்வு செய்து வருகிறது. இதற்கான செலவை மாநில அரசு மானியமாக வழங்க உள்ளது. விருப்பமுள்ள விவசாயிகள் சுய உதவி குழுவினர் பெயரை பதிவு செய்யலாம், என்றார்.

**தரமான விதைக்கு புறத்தூய்மை அவசியம் : விதைப் பரிசோதனை அலுவலர் தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2011,02:27 IST

திருநெல்வேலி : தரமான விதைக்கு புறத்தூய்மை மிகவும் அவசியம் என நெல்லை விதைபரிசோதனை அலுவலர் தமிழ்மலர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது; அறுவடை செய்த விதைகளை சேமிக்கும் முன் தூய விதையினை மட்டும் பிரித்தெடுத்து சேமிக்க வேண்டும். ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச புறத்தூய்மை அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நெல்லையில் உள்ள விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் பரிசோதனைக்கு அனுப்பப்படும் மாதிரிகளின் புறத்தூய்மையினை அறிய தூய விதை சதவீதம், பிறதானிய விதை சதவீதம், உயிர்ப்பற்ற பொருள் சதவீதம், களைவிதை சதவீதம் போன்றவற்றை தனித்தனியே கணக்கிட்டு ஆய்வு முடிவு வழங்கப்படுகிறது. நெல், மக்காசோளம், பருத்தி, சூரியகாந்தி, பயறு வகை போன்றவைகளுக்கு 98 சதவீதமும், வெண்டை 99சதவீதமும், கேழ்வரகு, எள் 97 சதவீதமும், நிலக்கடலை, பீட்ருட், முருங்கை 96சதவீதமும், காரட்,பீன்ஸ், கீரை,மல்லி 95சதவீதமும் புறத்தூய்மை இருத்தல் அவசியமாகும். எனவே விவசாயிகள் தாங்கள் சேமிக்கும் விதையினை

தூய விதையாக சேமித்தல் அவசியம் என நெல்லை விதைப்பரிசோதனை அலுவலர் தமிழ்மலர் தெரிவித்துள்ளார்.

**மண்புழு உரம் உற்பத்தி செய்யும் முறை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2011,03:55 IST

கருத்தை பதிவு செய்ய

வல்லநாடு: கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரியில் சில்பாலின் உரப்பை மூலம் மண்புழு உரம் உற்பத்தி செய்யும் பயிற்சி நடந்தது. நீர்வள, நிலவள திட்ட விஞ்ஞானி முனைவர் ரமேஷ் வரவேற்றார். வே ளாண்மை கல்லூரியின் முதல்வர் முனைவர் கணேசன் தலைமை வகித்து திட்டங்களின் பலன்கள் மக்களை சென்றடைவதில் விரிவாக்க அலுவலர்கள், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் மக்களின் பங்கேற்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி பேசினார். வேள ாண்மை இணை இயக்குநர் தேவசகாயம் பேசினார். உழவியல் துறை தலைவர் பேராசிரியர் சுந்தர்சிங்ராஜபாண்டியன்உரத்தொழில் நுட்பத்தின் மூலம் உரச் செலவை குறைக்கும் வழிமுறைகள் குறித்துப் பேசினர். முனைவர் ரமேஷ் சில்பாலின் உர உற்பத்தி முறைகள் பற்றி பேசினார். பின்னர் நடந்த செயல் விளக்க பயிற்சியில் நுண்ணுயிரியல் துறை உதவி பேராசிரியை ஜெபர்லின் பிரவீணா விளக்கமளித்தார்.

**அணைக்கு நீர் வரத்து இல்லை : வெளியேறும் அளவு குறைப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,22:41 IST

கருத்தை பதிவு செய்ய

பழநி : மாவட்டத்தில் அணைகளுக்கு நீர் வரத்து குறைந்துள்ளதால், வெளியேற்றப்படும் நீரின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது. நவம்பர் இறுதிவரை, பெய்த மழையால் மாவட்டத்தில் பெரும்பாலான அணைகள் நிரம்பின. அதிகளவு நீர் வரத்து காரணமாக, பாசன கண்மாய், ஆறுகளுக்கு கூடுதல் நீர் திறந்து விடப்பட்டது. இரண்டு வாரங்களாக, நீர் வரத்து குறைவு காரணமாக, வெளியேற்றப்படும் நீரின் அளவும் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.
அணைகளின் நீர்மட்டம் விபரம்: பழநி வரதமாநதி அணை நீர்மட்டம் 62.89 அடி (மொத்தம் 67 அடி). வினாடிக்கு 28 கனஅடி நீர்வரத்தும், 30 கனஅடி வெளியேற்றமும் உள்ளது. பாலாறுபொருந்தலாறு அணை நீர்மட்டம் 64.24 அடி (மொத்தம் 65 அடி). வினாடிக்கு 104.24 கனஅடி நீர்வரத்தும், 39 கனஅடி நீர்வெளியேற்றமும் இருந்தது. குதிரையாறு அணை நீர்மட்டம்,

78.02 அடி(மொத்தம் 80 அடி). வினாடிக்கு தலா 16 கனஅடி நீர்வரத்தும், வெளியேற்றமும் இருந்தது.ஒட்டன்சத்திரம் பரப்பலாறு அணை 88.9 அடி(மொத்தம் 90 அடி). வினாடிக்கு தலா 96 கனஅடி நீர்வரத்தும், வெளியேற்றமும் இருந்தது. நங்காஞ்சியாறு அணை, 37.16 அடி(மொத்தம் 40 அடி). 17 கனஅடி நீர்வரத்து உள்ளது. நீர்வெளியேற்றம் இல்லை. வேடசந்தூர் குடகனாறு அணை நீர்மட்டம் 25.50 அடி(மொத்தம் 27.07 அடி). வினாடிக்கு தலா 200 கனஅடி நீர்வரத்தும், வெளியேற்றமும் உள்ளது.

***நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உணவு பணவீக்கம் 4.35 சதவீதமாக குறைந்தது***



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி

டிசம்பர் 3–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பணவீக்கம் கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 4.35 சதவீதமாக குறைந்துள்ளது என மத்திய அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. காய்கறிகள், வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் கோதுமை ஆகியவற்றின் விலை குறைந்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

மொத்த விலை

மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இந்த பணவீக்கம் முந்தைய வாரத்தில் 6.60 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது இப்பணவீக்கம் 2.25 சதவீதம் குறைந்துள்ளது. கடந்த 2008–ஆம் ஆண்டு பிப்ரவரி 23–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 4.28 சதவீதமாக குறைந்து இருந்தது. அதன் பிறகு தற்போதுதான் இந்த அளவிற்கு குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய நிதி அமைச்சகத்தின் தலைமை பொருளாதார ஆலோசகர் கவுசிக் பாசு இது குறித்து கூறுகையில், “பருவமழை நன்றாக உள்ளதால், உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரித்துள்ளது. மேலும், சென்ற ஆண்டின் இதே வாரத்தில் உணவு பணவீக்கம் மிகவும் உயர்ந்து இருந்தது. அதனுடன் ஒப்பிடும்போது உணவு பணவீக்கம் குறைந்துள்ளதாக தோன்றுகிறது. இன்னும் ஒரு மாதத்திற்குள் இது 3 சதவீதத்திற்கும் கீழாக குறைந்துவிடும்” என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டின் இதே வாரத்தில் உணவு பணவீக்கம் 10.78 சதவீதமாக உயர்ந்து இருந்தது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓராண்டு கால அடிப்படையில் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு விலை முறையே 46.03 சதவீதம் மற்றும் 33.28 சதவீதம் குறைந்துள்ளது. காய்கறி விலை 12.28 சதவீதம் குறைந்துள்ள நிலையில், கோதுமை விலை 4.43 சதவீதம் குறைந்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள்

அதேசமயம், பருப்பு வகைகள் மற்றும் பால் விலை முறையே 11.76 சதவீதம் மற்றும் 11.08 சதவீதம் உயர்ந்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 9.26 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில் பழங்கள் மற்றும் தானியங்கள் விலை முறையே 9.37 சதவீதம் மற்றும் 1.85 சதவீதம் உயர்ந்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள், கனிமங்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் நவம்பர் 26–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 1.37 சதவீதமாக இருந்தது. இது, தற்போது 2.12 சதவீதமாக உயர்ந்துள்ளது. எரிபொருள் மற்றும் எரிசக்தி பணவீக்கம் 15.53 சதவீதத்திலிருந்து 15.24 சதவீதமாக குறைந்துள்ளது.

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள முதன்மை பொருள் பணவீக்கம் 6.92 சதவீதத்திலிருந்து 5.48 சதவீதமாக குறைந்துள்ளது.

ரொக்க இருப்பு விகிதம்

பாரத ரிசர்வ் வங்கி பலமுறை முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை

உயர்த்தியதையடுத்து, கடந்த செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஒன்பது காலாண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.9 சதவீதமாக குறைந்துள்ளது. அக்டோபர் மாதத்தில் தொழில்துறை உற்பத்தி கடந்த 28 மாதங்களில் இல்லாத அளவிற்கு 5.1 சதவீதம் சரிவடைந்துள்ளது. இந்நிலையில், பணவீக்கம் குறைந்து வருவது மத்திய அரசுக்கும், பாரத ரிசர்வ் வங்கிக்கும் சற்று ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது.

எனவே, பாரத ரிசர்வ் வங்கி இன்று வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் முக்கிய கடன்களுக்கான வட்டியை உயர்த்த வாய்ப்பில்லை என்றும், மாறாக வங்கிகளுக்கான ரொக்க இருப்பு விகிதத்தை குறைக்கும் எனவும் சில பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## கடந்த நிதி ஆண்டில் உணவு பதப்படுத்தும் துறையில் அன்னிய முதலீடு 32% சரிந்தது

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி

கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் உணவு பதப்படுத்துதல் துறையில் அன்னிய நேரடி முதலீடு 32 சதவீதம் சரிவடைந்து 18.87 கோடி டாலராக குறைந்துள்ளது. இது, முந்தைய நிதி ஆண்டில் 27.89 கோடி டாலராக இருந்தது. உணவு பதப்படுத்துதல் துறைக்கான மத்திய ராஜாங்க அமைச்சர் சரன் தாஸ் மகந்த் பாராளுமன்ற மக்களவையில் அண்மையில் இந்த தகவலை தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், உணவு பதப்படுத்துதல் துறையில் அன்னிய நேரடி முதலீட்டை அதிக அளவில் ஈர்ப்பதால் ஏற்படும் தாக்கம் குறித்து ஏதும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அதே சமயம் ‘கண்ணோட்டம் 2015’ என்ற பெயரில் ஒரு செயல்திட்டத்தை உருவாக்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று அவர் தெரிவித்துள்ளார். இதற்கான பரிந்துரைகளை செய்த ரபோ பேங்க், மத்திய அரசின் ஆதரவுடனே ஆய்வுகளை மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

உணவு பதப்படுத்துதல் துறையில் 20 சதவீத பொருள்களே மதிப்புக் கூட்டப்படுகின்றன. 2015–ஆம் ஆண்டுக்குள் இதனை 35 சதவீதமாக அதிகரிக்கவும், இதே கால அளவில் பதப்படுத்திய உணவுப் பொருள் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கினை தற்போதைய 1.5 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகவும் அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. மேலும் அடுத்த நான்கு ஆண்டுகளில் இத்துறையில் ரூ.1 லட்சம் கோடி முதலீட்டை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.10,000 கோடி மத்திய அரசின் பங்காக இருக்கும் என அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

## முல்லைப் பெரியாறு போராட்டம் எதிரொலி: கேரளாவில் காய்கறிகள் விலை 'கிடு கிடு' உயர்வு

*குமுளி,டிச.16–*

*முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை தொடர்பான போராட்டங்கள், பதற்றம் எதிரொலியாக கேரளாவில் சில மாவட்டங்களில் காய்கறி வரத்து குறைந்து உள்ளது. இதனால் காய்கறிகள் விலை 'கிடு கிடு'வென உயர்ந்து உள்ளது.*

*அத்தியாவசிய பொருட்கள்*

*கேரள மாநிலம் பார்ப்பதற்கு பச்சை பசேலென இயற்கை அழகு நிறைந்து காணப்பட்டாலும், உணவுதேவையை பூர்த்தி செய்யக்கூடிய அத்தியாவசிய பொருட்களின் உற்பத்தி என்பது அங்கு மிகவும் சொற்பம்தான். அங்கு தேங்காய், ரப்பர், தேயிலை, மற்றும் ஏலக்காய், மிளகு உள்ளிட்ட நறுமணப் பொருட்கள் அதிக அளவில் விளைந்தாலும், அன்றாட உணவுக்கு தேவைப்படும் அரிசி, காய்கறிகள், பால், இறைச்சி உள்ளிட்டவைகளுக்கு கேரள மக்கள் அண்டை மாநிலமான தமிழகத்தைத்தான் முழுமையாக நம்பி இருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.*

*அதனால் தமிழக–கேரள எல்லைகளில் உள்ள திண்டுக்கல், தேனி, கோவை, நீலகிரி, நெல்லை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இருந்தும், கர்நாடக மாநிலத்தில் மைசூரில் இருந்தும் காய்கறிகள் நூற்றுக்கணக்கான லாரிகளில் கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.*

*குறிப்பாக தமிழகத்தின் 2–வது மிகப்பெரிய மார்க்கெட்டாக விளங்கும் ஒட்டன்சத்திரத்தில் இருந்தும், தேனி மாவட்ட பகுதிகளில் இருந்துமே பெருமளவு காய்கறிகள் கொண்டு செல்லப்பட்டு வருகின்றன.*

*பாதிப்பு*

*அதேபோல் தேனி மாவட்டம் கம்பம், கூடலூர் உள்ளிட்ட கிராமப்புறங்களில் இருந்து இடுக்கி, மூணாறு, எர்ணாகுளம் ஆகிய மாவட்ட பகுதிகளுக்கும், கோவை, நீலகிரி மாவட்டங்களில் இருந்து பாலக்காடு, திருச்சூர், கொச்சி, கோழிக்கோடு பகுதிகளுக்கும், நெல்லை மாவட்டத்தில் இருந்து செங்கோட்டை வழியாக கொல்லம், கோட்டயம் ஆகிய பகுதிகளுக்கும் காய்கறிகள் கொண்டு செல்லப்படுகின்றன.*

*இந்த காய்கறிகள், அரிசி, பால் உள்ளிட்ட உணவுப்பொருட்கள் அனைத்தும் தமிழகத்தில் இருந்து 13 முக்கிய வழிச்சாலைகளில் கேரளாவுக்கு அனுப்பப்பட்டு வரும் சூழ்நிலையில் கடந்த சில நாட்களாக எழுந்து உள்ள முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை காரணமாக கேரளாவுக்கு உணவுப்பொருட்கள், காய்கறிகள் வரத்து பாதிக்கப்பட்டு ஒரு சில மாவட்டங்களில் பாதிக்கப்பட்டு இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்து உள்ளனர்.*

*விலை உயர்வு*

*முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை தொடர்பாக தேனி மாவட்டத்தில் நடைபெறும் போராட்டத்தின் எதிரொலியாக இடுக்கி மற்றும் எர்ணாகுளம் பகுதிகளுக்கு கொண்டு*

செல்லப்படும் காய்கறிகளின் அளவு வழக்கத்தைவிட குறைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இதை ஈடுகட்டும் வகையில் கேரள மாநிலத்திற்கு பிற இடங்களின் வழியாக வரும் காய்கறிகளை தட்டுப்பாடு உள்ள இடங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

இதனால் தட்டுப்பாடு ஏற்படும் இடங்களில் காய்கறிகளின் விலை ஓரளவு உயர்ந்து உள்ளது. குறிப்பாக இடுக்கி, எர்ணாகுளம் மாவட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக காய்கறி விலை உயர்ந்திருக்கிறது. குமுளி மார்க்கெட்டில் நேற்றைய விலை நிலவரப்படி, பீன்ஸ் ஒரு கிலோவுக்கு கடந்த வாரம் ரூ.30 ஆக இருந்தது தற்போது ரூ.40 ஆக உயர்ந்து உள்ளது.

மூணாறு பகுதி

அதேபோல் தக்காளி ரூ.20–ல் இருந்து ரூ.30 ஆகவும், பெரிய வெங்காயம் ரூ.15–ல் இருந்து ரூ.22 ஆகவும், உருளைக்கிழங்கு ரூ.20–ல் இருந்து ரூ.25 ஆகவும், கேரட் ரூ.30–ல் இருந்து ரூ.35 ஆகவும், கத்தரிக்காய் ரூ.25–ல் இருந்து ரூ.30 ஆகவும் விலை உயர்ந்து காணப்பட்டது. காய்கறிகள் வரத்து குறைந்து உள்ள பகுதிகளில் விலை உயர்ந்து இருப்பதோடு மட்டுமின்றி, அந்த இடங்களுக்கு காய்கறிகளை கொண்டு செல்லும் சிறு வியாபாரிகள் விலையை தாறுமாறாக வைத்து விற்பனை செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

மூணாறு பகுதியை பொறுத்தவரை கட்டப்பனை, அடிமாலி, தொடுபுழா, செருதோணி ஆகிய பகுதிகளில் காய்கறிகள் விலை இருமடங்கு அதிகரித்து உள்ளது. கோவை, மேட்டுப்பாளையம், மற்றும் திருப்பூர் மாவட்டம் உடுமலை ஆகிய பகுதிகளில் போதுமான அளவுக்கு காய்கறிகள் வருவதால் பெரிய அளவில் பற்றாக்குறை இல்லை என்று வியாபாரிகள் தெரிவித்து உள்ளனர். ஆனால் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையை காரணமாக வைத்து கிராமப்பகுதிகளில் சிலர் காய்கறிகளை கூடுதலாக விற்பனை செய்து வருவதாகவும், அந்த வகையில் சில இடங்களில் ஒரு கிலோ தக்காளி ரூ.150–க்கும் விற்பனை செய்யப்படுவதாகவும் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

# பூண்டு விளைச்சல் அமோகம்



மஞ்சூர் அருகே உள்ள பிக்கட்டி கிராமத்தில் விவசாயிகள் பூண்டு விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அங்கு பயிரிடப்பட்ட பூண்டு தற்போது நல்ல விளைச்சலை தந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளதை படத்தில் காணலாம்.